# நரகம்

## நித்திய வாழ்வா அல்லது நித்திய அழிவா?

இதுவரை கேட்டிராத

மிகச்சிறந்த செய்தி!

உங்களை பாதிக்கும் உண்மைகள்!

**ஆச்சரியமான ஓர் உண்மை:** ஜான் F. கென்னடி என்பவர் ஒரு இரகசிய கொலையாளியினால் நவம்பர் 22, 1963ல் கொல்லப்பட்டார் என்பது பெரும்பாலான அமெரிக்கர்கள் அறிந்த விஷயமாகும். ஆனால் உலக புகழ்பெற்ற வேறு இரு நபர்களும் அதே நாளில் மரித்தனர் என்பதை வெகு சிலரே அறிவார்கள். இவர்கள் நித்தியத்தைக் குறித்து இரு வித்தியாசமானக் கருத்துக்களை உடைய எழுத்தாளர்கள். ஆல்டஸ் ஹுக்ஸ்லே "ப்ரேவ் நியூ வேர்ல்டு" என்ற டிஸ்டோப்பியன் நாவலை எழுதியவர் மற்றும் C.S. லூயீஸ் "க்ரானிக்கல்ஸ் ஆ.்.ப் நார்னியா" என்ற கிறிஸ்தவ உருவகக் கதையை எழுதியவர். யதார்த்தவாதியான ஹுக்ஸ்லே மரித்தபின் உள்ள வாழ்வைக் குறித்து ஏளனமாகவும், லூயீஸ் தன்னிலை மறந்துபோன ஒரு உலகத்திற்கு நம்பிக்கையின் மாற்று வழியாகப் பரலோகத்தையும் வெளிப்படுத்தினர். நிச்சயமாகவே, மீட்கப்பட்டவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் பரலோக நித்தியவாழ்வைக் குறித்து வேதம் தெளிவாக வாக்குரைத்துள்ளது.

அப்படியானால், மனந்திரும்பாத பாவிகளின் நிலை என்ன? அவர்களும் நரகத்தில் நித்தியத்திற்கும் வாழ்வார்களா? தங்களுடைய பூலோகப் பாவங்களுக்காக அவர்கள் கோடிக்கணக்கான ஆண்டுகள் எரிந்துகொண்டிருப்பார்களா? இதுவரையிலும், இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் நரக அக்கினியில் எரிவார்கள் என்றே நம்புகிறார்கள்.

ஆனால் இது உண்மையா? வேதம் என்ன கூறுகிறது என்பதை ஆய்வு செய்வோம்.

## உண்மையாகவே நரகத்தைக் குறித்து வேதம் கூறுவது என்ன?

### 1 தெளிவான மற்றும் தவறில்லாத உண்மைகள்

இதை வேதத்தின் மிகவும் பிரபலமான வசனத்திலிருந்து துவங்குவதே சிறப்பாக இருக்கும்.

> “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).”

கவனமாகப் பார்க்கவும்! இந்த வசனம் எவ்வாறு கெட்டுப்போனவர்களுடைய முடிவை தீர்மானிக்கமுடியும்?

அவர்கள் கெட்டுப்போவார்கள். “கெட்டுப்போவது” என்றால் “உயிரற்ற நிலை” என்று அர்த்தம். நித்தியத்திற்கும் நரகத்தில் இருக்கக்கூடிய ஒருவரை “அழிந்துபோனவன்” என்று கூறமுடியாது. நித்திய வாழ்க்கைக்கான எதிர்ப்பதம் நித்திய மரணமாகும் - நித்திய உபத்திரவம் அல்ல...

மேலும், கெட்டுப்போனவர்கள் “நித்திய அழிவினால்” தண்டிக்கப்படுவார்கள் என அப்போஸ்தலனாகிய

பவுலும் கூறுகிறார் (2 தெச. 1:9). நித்தியம் என்றால் என்ன? அவர்களது அழிவுதான்! அப்படியானால் துன்மார்க்கர் நித்தியத்திற்கும் அழிக்கப்படுவார்கள். இது நித்தியத்திற்கும் அவர்கள் உபத்திரவப்படுத்தப்படுவார்கள் என்ற கருத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

சங்கீதம் 37:20 இவ்வாறு கூறுகிறது, "துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள்...புகையாய்ப் புகைந்துபோவார்கள்." இது உங்களுக்கு எப்படி தோன்றுகிறது? நித்திய உபத்திரவத்தைப்போல் தோன்றுகிறதா அல்லது நித்திய அழிவைப்போல் தோன்றுகிறதா?

ஆனால் இயேசுவைப் பற்றி என்ன கூறுவது? அவர் என்ன கூறினார்? மீட்கப்பட்டவர்கள் மற்றும் கைவிடப்பட்டவர்களுடைய முடிவை அவர் இவ்வாறு கூறுகிறார்: "அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்" (மத்தேயு 25:46). இரண்டு முடிவுகள் உண்டு: "நித்திய வாழ்க்கை" மற்றும் "நித்தியமான அழிவு."

முடிவு தெளிவாக இருக்கிறது அல்லவா? இறுதி தண்டனையின் முடிவு என்பது மீண்டும் திரும்பமுடியாத ஒரு மரணமாக இருக்கும்.

## 2 "நித்திய அக்கினி" என்பது என்ன?

சோதோமின் அநேகப் பாவங்களினிமித்தம் அது "நித்திய அக்கினியின் ஆக்கினையை

அடைந்தது'' (யூதா 7) என்று வேதம் கூறுவது குறித்து உங்களுக்குத் தெரியுமா? அப்படியென்றால் சோதோம் இன்னும் பூமியில் எங்காவது இன்றும் எரிந்துகொண்டேயிருக்கிறதா என்ன? சோதோம் பட்டணம் சாம்பலாக்கப்பட்டது என்றும் வேதத்தில் நாம் பார்க்கிறோம் அல்லவா? (2 பேதுரு 2:6ஐ படிக்கவும்).

அப்படியானால், ''நித்திய அக்கினியைக்'' குறித்து வேதம் கூறுவது என்ன? ''நித்தியம்'' அல்லது ''சதாகாலம்'' என்ற வார்த்தைகளுக்கான எபிரெய வார்த்தை ''ஒலாம் (ழடயஅ)'' ஆகும். ஒலாம் என்றால் ஒரு காரியம் ''முடிவுபெற்றாயிற்று'' என்று அர்த்தம். உதாரணத்திற்கு, அடிமையானவன் தன் எஜமானுக்கு ''நித்தியத்திற்கும்'' சேவிக்கவேண்டும் என்று (யாத்திராகமம் 21:6) கூறுகிறது. எனினும், அவன் மரித்தபோது அந்த சேவையானது நிறைவேறுகிறது. மேலும் சாமுவேல் தீர்க்கதரிசி ஆலயத்தில் ''எப்பொழுதும்'' இருக்கவேண்டும் (1 சாமு. 1:22) என்று கூறுகிறது. ஆனால் அவரும் முடிவில் மரித்துப்போனார் என்று பார்க்கிறோம். யோனாவும், தான் மீனின் வயிற்றிற்குள் ''என்றென்றைக்கும்'' இருந்ததாகக் (யோனா 2:6) கூறுகிறார், ஆனால் அவர் மூன்று நாட்கள் மட்டுமே இருந்தார்.

ஆனால் ''அவியாத அக்கினியுள்ள'' நரகம் குறித்து (மாற்கு 9:45) இயேசு எச்சரித்தது என்ன? நரகத்தின் அக்கினி எரிந்துகொண்டேயிருக்கும் என்பதற்கு இது ஒரு உதாரணம் அல்லவா? பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எரேமியா தீர்க்கதரிசியும் கூட (எரே. 17:27)

எருசலேமின் அரண்மனைகள் நரகத்தின் “அவியாத அக்கினியினால்” சுட்டெரிக்கப்படும் என்று முன்னுரைத்தார். அதேவிதமாக, முன்னுரைக்கப்பட்டபடி பாபிலோனியர்கள் வந்து எருசலேமைத் தீக்கொளுத்தினார்கள். அவியாத அந்த அக்கினி பல காலங்களுக்கு முன்னமே எரிந்துவிட்டன.

எனவே, இயேசு “அவியாத அக்கினி” என்று கூறியதின் அர்த்தம் அக்கினி அதின் வேலையை செய்து முடிக்கும்வரை அவியாது, அதாவது கெட்டுப்போனவர்கள் அழிக்கப்படும்வரை முடிவடையாது என்பதையே குறிக்கிறது.

பவுல், பேதுரு மற்றும் இயேசு ஆகிய மூவரும் கெட்டுப்போனவர்களுடைய இறுதி “அழிவைக்” குறித்து (பிலி. 3:19; 2பேது. 2:1; மத். 7:13) எச்சரித்துள்ளார். மூவரும் மீட்கப்பட்டவர்களுடைய நித்திய வாழ்வைக் குறித்தும் பேசுகிறார்கள் (யோவான் 17:3; ரோமர் 2:7; 1பேது. 1:4). எனவே, நித்திய வாழ்க்கையின் எதிர்ப்பதம் நித்திய உபத்திரவமல்ல நித்திய மரணமாகும்.

## 3 நித்திய வாழ்க்கையா அல்லது நித்திய மரணமா?

“கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார்...” (யாக்கோபு 5:11). நான் அன்பானவர் என்று உரிமைக்கோரும் தேவனை நிராகரிப்பதால் மக்கள் நீதியாக

நியாயந்தீர்க்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட அன்பான தேவன் கோடிக்கணக்கான மக்களை எரிகிற நரக அக்கினியில் இவ்வுலகத்தில் செய்த பாவங்களுக்காக நித்தியத்திற்கும் உபத்திரவப்படுத்துவாரா? நற்செய்தி என்னவென்றால் அப்படி ஒரு தேவன் இல்லவே இல்லை!

என்றாலும், மனந்திரும்பாத பாவிகளை நித்தியத்திற்கு வாழவும் தேவன் அனுமதிப்பதில்லை என்பதும் உண்மையே. "பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளி. 15:3).

மாறாக, சாத்தியமான இரண்டு நித்தியத்தை உங்களுக்காக தேவன் வைத்திருக்கிறார்: புதிய பூமியில் நித்திய வாழ்வு (2 பேது. 3:13) அல்லது நித்திய அழிவு. இது ஒவ்வொரு தனிநபரும் எடுக்கவேண்டிய தீர்மானாகும்.

மரணத்திற்கு பாத்திரவானில்லாத இயேசு உங்களுக்காக தன்னுடைய பரிபூரண வாழ்வை அளித்துள்ளார். கிறிஸ்து அளிக்கும் இரட்சிப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, அவருடைய கிருபையால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு, அவருடைய நித்திய இராஜ்ஜியத்திற்குள்ளாக வரவேற்கப்படுகிறீர்கள். ஆனால் அவருடைய அன்பினின்று பிரிந்து, மனந்திரும்ப மறுக்கிறவர்கள் நித்திய அழிவை அடைவார்கள்.

நீங்கள் எதைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள்?




## இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமா?

மரணம், நரகம், மற்றும் மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கைக் குறித்தும் ‘சாத்தான் தான் நரகத்திற்கு அதிகாரியாக இருக்கிறானா?’ என்ற இந்தப் பாடத்தில் கற்றுக்கொள்ளலாம். உங்களுக்கான டிஜிட்டல் பிரதியை Hell11.AFTV.in-ற்கு வருகை தருவதன்மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

---

AMAZING FACTS
India

**AmazingFactsIndia.org**
Post Box No 51
Banjara Hills, Hyderabad 500034
+91 916 916 4480 | Bookstore.AFTV.in